**28 நாகம்எய்தபடலம்**

அனந்தகுணபாண்டியன் அரசாண்டகாலத்தில்சைவம்செழித்து, மதுரைமாநகர்சிவபெருமானின்திருகைலாயம்போல், பொலிந்துவிளங்கிற்று.இதைக்கண்டுபொறாமைக்கொண்ட சமணர்கள் பெரிய யாகம் ஒன்றுச் செய்தனர். அதனின்று கிளம்பின அவுணனை சோமவார விரத பலத்தால் சுந்தரிகாந்திமதியும் சயந்தனன் என்னும் வீரபாண்டியனைப் பெற்றாள் மதுரைக்குச் சென்று, பாண்டியனையும் மதுரையையும் அழித்திடும்படி ஏவினார்கள். உடனே அவன் கொடிய விஷப்பாம்பாக மாறி மதுரையின் மேற்குதிசையை அடைந்தான்.

பாம்பினைக் கண்ட மக்கள் மன்னனிடம் அறிவித்தார்கள். மன்னனும் முன்பு மதயானையை அனுப்பிய சமணர்களே இதனையும் அனுப்பியுள்ளனர் என்று அறிந்து, பாம்பினை அணிகலனாக அணிந்த ஐயன் காப்பாற்றுவார் என அவர்களுக் குதைரியம் கூறி, இறைவனை வணங்கினான். ஐயனும் பாண்டியனிடம் தான் உடன் இருப்பதாக் கூறி, பாம்புடன் போரிடுமாறு பணித்தார்.

சுந்தரரை மனத்தால் தியானித்து, பிறை போன்ற வடிவுள்ள கணையால் பாண்டியன் பாம்பினைத் தாக்க, பாம்பானது துடிதுடித்து விஷத்தைக் கக்கி இறந்தது. ஆனால் அதன் நஞ்சின் நெடியால் மதுரை முழுவதும் தீயால் பாதிக்கப்பட்டது. அனந்தகுணபாண்டியன் எம்பெருமானிடம் மக்களை காக்கும் படிவேண்டிநின்றான். அருட்கடலாகிய எம்பெருமான் தன் திருச்சடையில் அணிந்த இளம்பிறைஉள்ள அமுதத்தினின்று ஒரு சிறு துளியை சிந்தியருளினார். அச்சிறு துளியானது மதுரை மாநகரம் முழுதும் பரவி முன் போல் மதுரை மாநகரைதூய்மைபெறச்செய்தது.

அனந்தகுணபாண்டியன் சோமசுந்தர கடவுளை நாள்தோறும் வணங்கி நெடுங்காலம் சிறப்புற அரசாண்டு வந்தான்.

**பல்லவி**

மதுரையோடு மன்னனை அழித்திடச் சொல்லி
சமணர்கள் யாகம்  செய்து அவுணனை ஏவினர்

**அனுபல்லவி**

அது கேட்ட அனந்தகுணன் உந்தன் அருளால்
கொடிய நாகமானவனை பிறைக் கணையால் வதைத்தான்

**சரணம்**

கக்கின நஞ்சின் நெடி தாங்காமலே மக்கள்
கஷ்டப்படுவதைக் கண்டு உன்னை வேண்ட
அக்கணமே உன் தலையில் உள்ள மதியின்
அமுதத்தைச் சிந்தி அனைவரையும் காத்தீர்